1992 செப்டம்பர் 24] [திரு. ஜி. விசுவநாதன்]

சினை சற்று சிக்கலாக இருக்கிறது. அங்கே வருகின்ற விண்ணப்பங்களும் மற்ற எல்லா தொகுதிகளையும் விட அதிகமாகவே இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற 4 தாலுக்காகளில் மட்டும் இதுவரை வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 35,088. இதுவரை நாம் வைத்திருந்த சட்டப்படி 2 பங்கு போலிக் கார்டுகளைப் பிடித்தால் ஒரு பங்கு புதிய கார்டுகளை வழங்கலாம் என்று வைத்திருந்தோம். அது இந்த மாவட்டத்திற்கு பொருத்தம் இல்லையென்று அங்கேயிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன காரணத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து இதுவரையில் 8,396 கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் முன்னுரிமை கொடுத்து வழங்கிய கார்டுகள் 936 என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தாலுகா வாரியாக பார்க்கும்போது குறிப்பாக, விளவங்கோடு பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அங்கே மட்டும் 11,458 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. இங்கே அதிகமாக விண்ணப்பங்கள் வருவதற்கான காரணத்தையும் உறுப்பினர் தெரிவித்தார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே கேரளாவிலே வாழ்பவர்கள்கூட அந்தப் பகுதிக்கு வந்து குடும்ப அட்டை வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை அடையாள அட்டையாகக்கூட பலபேர் பயன்படுத்துகிறார்கள். நம்முடைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் வாங்குவதற்கு மற்றும் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பெயர்களை பதிவு செய்வதற்குக்கூட பயன்படுத்துகிறார்கள். ஆகவே, ரெவின்யூ இலாகாவின் மூலம் அத்தகைய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு முடியுமா என்பதைப் பற்றி கூட யோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவிதமான சிரமமும் இல்லாமல், யார் யாருக்கு உள்ளபடியே கார்டு வழங்கப்படாமல் இருக்கிறதோ அவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும். சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்த உடனேயே நானே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரில் சென்று இது குறித்து உரிய முறையில் பிரச்சினையை தீர்த்து வைப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.00

3. விதி 110—ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

(அ) இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முக்கியப் பிரச்சினைகள் குறித்து பேரவையில் அறிக்கைகள் வைக்க வேண்டி பேரவை விதி

110—ன்கீழ் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது அந்த இரண்டு அறிக்கைகளையும் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, 23—9—1992, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களும் துணை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றும்போது இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தைப் பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவை குறித்து சரியான விவரங்களை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் அரசு சென்ற ஆண்டு தமிழகத்தில் உள்ள 1,20,00,000 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை எளியோருக்கும் இலவசமாக வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 60 இலட்சம் வேட்டிகளையும் 60 இலட்சம் சேலைகளையும் வழங்க திட்டமிடப்பட்டது. வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் சேலைகளில் இதுவரை, அதாவது 23—9—1992 வரை 59,99,870 சேலைகள் வழங்கப்பட்டு விட்டன. வேட்டிகளைப் பொறுத்த மட்டில் வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் வேட்டிகளில் இதுவரை 57,69,234 வேட்டிகள் வழங்கப்பட்டுவிட்டன. இனி 130 சேலைகளும், 2,30,766 வேட்டிகளும் மட்டுமே வழங்கப்பட வேண்டியுள்ளது. மீதமுள்ள இந்த வேட்டி சேலைகள் அனைத்தும் கோவாப்டெக்ஸ் மூலமாகப் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வரும் அக்டோபர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முழுமையாகக் கொடுத்து முடிக்கப்படும். ஒரு சில மாவட்டங்களில் உள்ள ஒரு சில தாலுக்காக்களில் வேட்டிகள் இன்னும் பெறப்பட வேண்டியிருப்பதால், ஏற்கெனவே கிடைக்கப்பெற்ற சேலைகள், பயனாளிகளுக்கு வேட்டிகளையும் சேலைகளையும் சேர்த்து வழங்கலாமென்ற அடிப்படையில் வழங்கப்படாமல் உள்ளன. கிடைக்கப்பெற்ற சேலைகளை உடனடியாகப் பயனாளிகளுக்கு வழங்கும்படி ஆணையிட்டுள்ளேன். இன்னும் வழங்கப்பட வேண்டிய 2,30,766 வேட்டிகளும், 130 சேலைகளும் விரைவில், அதாவது அக்டோபர் 15—ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு வேட்டிகளும், சேலைகளும் வழங்குவது ஒரு மிகப் பெரியத் திட்டம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இதனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்துவதிலுள்ள சிரமங்களையும் நீங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தில் வழங்க வேண்டிய 1,20,00,000 வேட்டி சேலைகளில் இதுவரை 1,17,69,104 வேட்டி, சேலைகள் கொடுத்து முடித்துள்ளோம் என்பதே ஒரு சாதனையாகும். (மேசையைத்

தட்டும் ஒலி). இந்நிலையில் இத்திட்டம் சரிவர செயல் படுத்தப்படவில்லை என்று கூறிய கருத்துக்கள் தவறானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டுக்கு, அதாவது 1992—93 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து வேட்டிகளையும், சேலைகளையும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் உள்ள ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு "மறைமலை நகர்—காமராஜர் இரயில் நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாங்குளத்தூர்-சிங்கப் பெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு 'காமராஜர் நகர் இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு பிரிவினர்களிடமிருந்தும் அரசுக்கு வந்துள்ளன. மேலும் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர், நம் பாசத்திற்குரிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' என்ற பெயர் நிரந்தரமாக அவ்விடத்திற்கு இட வேண்டுமென்று மறைமலை நகரிய மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அறிவித்திருந்தார்.

பிறகு, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு காமராஜர் நகர் இரயில் நிலையம் என்று பெயரிடச் சொல்லி போராட்டங்கள் மூலமும், தனிப்பட்ட முறையில் கடிதங்களின் மூலமும் அரசுக்கு அவ்வப்போது வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அமரர் இராஜீவ் காந்தி அவர்களிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கிற வகையிலும், நேற்று என்னைச் சந்தித்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுத்த இந்தக் கோரிக்கையினை நிறைவு செய்கிற வகையிலும், இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கு மதிப்புக்